வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 11.7.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

ஆக்லாந்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றினார்.

நாட்டின் கடலோரப் பாதுகாப்பை மீற முடியாததாக மாற்றுவதில் அரசு உறுதியாக உள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

உலக மக்கள் தொகை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

காரைக்கால் திருநள்ளாறு சனீஸ்வர பகவான் கோவிலில் முன்னாள் பிரதமர் திரு தேவகவுடா சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டார். இரு நாடுகளுக்கும் இடையிலான வளர்ந்து வரும் கூட்டாண்மைக்கு, நியூசிலாந்தில் உள்ள இந்திய சமூகம் ஒரு முக்கிய தூணாக விளங்குகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.ஆக்லாந்தில் நடைபெற்ற சமூக நிகழ்வில் இந்தியப் புலம்பெயர்ந்தோர் மத்தியில் உரையாற்றிய திரு மோடி, இந்தியா-நியூசிலாந்து உறவுகள், பகிரப்பட்ட நினைவுகள், நீடித்த நட்பு மற்றும் ஒளிமயமான எதிர்காலத்திற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

புதிய எல்லைகளை நோக்கிய நியூசிலாந்தின் பாரம்பரியத்தைப் போலவே, இரு நாடுகளுக்கும் முன்னால் வாய்ப்புகளின் பரந்த கடல் உள்ளது என்றும், இந்தக் கூட்டாண்மையை மேலும் புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்ல இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளன என்றும் திரு மோடி மேலும் கூறினார். ஆக்லாந்து முதல் வெலிங்டன் வரையிலும், கிறிஸ்ட்சர்ச் முதல் குயின்ஸ்டவுன் வரையிலும், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் இந்திய சமூகம் அளப்பரிய பங்களிப்பைச் செய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில் பேசிய நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன், இரு நாடுகளுக்கும் இடையிலான வளர்ந்து வரும் பொருளாதாரக் கூட்டாண்மையை எடுத்துரைத்தார். நியூசிலாந்து-இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம், நியூசிலாந்து ஏற்றுமதியாளர்களுக்கு

140 கோடி மக்கள் கொண்ட சந்தைக்கான அணுகல் திறக்கப்பட்டுள்ளது என்றும், அதே நேரத்தில் நியூசிலாந்தில் உள்ள இந்திய வணிகங்களுக்கு புதிய வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

நியூசிலாந்து பிரதமர் திரு கிறிஸ்டோபர் லக்ஸன், இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய அந்தஸ்து, பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமைத்துவம் மற்றும் நியூசிலாந்தின் வளர்ச்சிக்கு இந்திய சமூகம் ஆற்றிய சிறந்த பங்களிப்பு ஆகியவற்றைப் பாராட்டினார். அவர் இந்தியாவை ஒரு முக்கிய கூட்டாளி என்று விவரித்ததோடு, இருதரப்பு உறவுகளை புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்வதற்கான தனது உறுதிப்பாட்டையும் மீண்டும் வலியுறுத்தினார்.பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய சமூகத்தினர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

**பிரதமர் நியுசிலாந்து பயணம் குறித்து கூடுதல் தகவல்கள்….(வாய்ஸ்)**

இந்தியா-நியுசிலாந்து இடையேயான வர்த்தகத்தை 35 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி, நியுசிலாந்து பிரதமர் திரு கிரிஷ்டோபர் லக்சான் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைக்கு பின்னர் வெளியிட்ட கூட்டறிக்கையில் இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை அடுத்த 5 ஆண்டுகளில் இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது. மேற்கு ஆசியாவில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. வளைகுடா பகுதியில் பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் பிரச்சனைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்றும் ஹார்மோஸ் நீரிணைப் பகுதியில் தடையின்றி வர்த்தக கப்பல்கள் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும், அந்த கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச சட்டத்திற்கு உட்பட்டு அமைதி பேச்சு வார்த்தை நடைபெற வேண்டும் என்றும் அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ஐ நா பாதுகாப்பு கவுன்சில் விரிவாக்கப்பட்டு கூடுதல் உறுப்பு நாடுகளை சேர்க்க வேண்டும் என்றும் இருதலைவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*அமித் ஷா*

நாட்டின் கடலோரப் பாதுகாப்பை மீற முடியாததாக மாற்றுவதில் அரசு உறுதியாக உள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும்

நீர்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவாலுடன் இணைந்து, துறைமுகப் பாதுகாப்புப் பணியகம் அமைப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்தபோது திரு ஷா இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். உரிமம் பெற்ற தனியார் பாதுகாப்பு நிறுவனங்களிடம் மட்டுமே துறைமுகப் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும், மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படையால் பயிற்சி பெற்ற பணியாளர்கள் மட்டுமே பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் உள்துறை அமைச்சர் கூறினார். தற்போதுள்ள உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி, துறைமுகப் பாதுகாப்புப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சியை விரைவில் தொடங்க வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

இந்த பாதுகாப்பு கட்டமைப்பின் கீழ் வரும் அனைத்து துறைமுகங்களிலும் கொள்கலன் ஆய்வு வசதிகள் பொருத்தப்பட வேண்டும் என்று உள்துறை அமைச்சர் மேலும் கூறினார். விசாகப்பட்டினம் துறைமுகம், ஜவஹர்லால் நேரு துறைமுகம் மற்றும் முந்த்ரா துறைமுகம் உள்ளிட்ட முக்கிய துறைமுகங்களில் முன்மொழியப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளின் சோதனை ஓட்டங்களை நடத்துமாறு CISF-க்கு அவர் உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மத்திய உள்துறைச் செயலாளர், புலனாய்வுப் பிரிவு இயக்குநர், எல்லை மேலாண்மைச் செயலாளர், துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகச் செயலாளர், மீன்வளத் துறைச் செயலாளர், சிஐஎஸ்எஃப் தலைமை இயக்குநர் மற்றும் பிற மூத்த அதிகாரிகள் கலந்துகொண்டனர். கப்பல்கள் மற்றும் துறைமுக வசதிகளின் பாதுகாப்பை ஒழுங்குபடுத்துவதற்கும் ஆய்வு செய்வதற்கும் இது பொறுப்பாக இருக்கும். மேலும், இணையப் பாதுகாப்பில் சிறப்பு கவனம் செலுத்தி, பாதுகாப்பு தொடர்பான தகவல்களை உரிய நேரத்தில் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்ந்துகொள்வதையும் இந்தப் பணியகம் உறுதி செய்யும்.

இஸ்ரோ உருவாக்கிய 'நவமித்ரா' செயலியை மேலும் பரவலாக விளம்பரப்படுத்த வேண்டும் என்றும், அதன் மூலம் அதிகமான மீனவர்கள் அதனைத் தங்கள் கைபேசிகளில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

*பிரிக்ஸ்*

பிரிக்ஸ் அமைப்பின் போக்குவரத்து துறை அமைச்சர்களின் மாநாடு மத்திய சாலை போக்குவரத்து துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தலைமையில் மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் இன்று நடைபெற்றது. நிலையான வளர்ச்சியை உருவாக்குவது என்ற கருப்பொருளின் அடிப்படையில் நடைபெற உள்ள இம்மாநாட்டில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். போக்குவரத்து துறையில் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு குறித்து இதில் முக்கியமாக விவாதிக்கப்பட உள்ளது.

*ராஜ்நாத் சிங்*

நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். விசாகப்பட்டிணம் கடல் பகுதியில் ஐஎன்எஸ் மகேந்திரகிரி போர்க்கப்பலை இந்திய கடற்படையுடன் இணைக்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர் ராணுவ தளவாடங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்க முன்னுரிமை அளிக்கப்படுவதாக கூறினார். செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்திய போதிலும் ராணுவ வீரர்களின் தைரியம் மற்றும் ஆற்றல் மூலம் மட்டுமே வெற்றி பெற முடியும் என்று அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார். சுய சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் ராணுவ தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய மத்திய அரசு உறுதிப்பூண்டிருப்பதாக அவர் கூறினார். ஐஎன்எஸ் மகேந்திரகிரி போர்க்கப்பலை இந்திய கடற்படையுடன் இணைப்பதன் மூலம் நமது கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்தார். கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 6 நவீன போர்க்கப்பல்கள் இந்திய கடற்படையுடன் இணைக்கப்பட்டது, நமது நாட்டின் வலிமையை பறைசாற்றுவதாக திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

*மக்கள் ெ□ாகை தினம்*

உலக மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதால் ஏற்படும் சவால்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. 1990-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐ நா பொது சபையின் மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை

11-ஆம் தேதி உலக மக்கள் தொகை தினமாக கடைபிடிக்க முடிவெடுக்கப்பட்டது.

இத்தினம் குறித்த கூடுதல் செய்தி தொகுப்பு........

இத்தினத்தை ஒட்டி, தமிழகம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு பேரணி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இளையோர்களின் ஆளுமையை மேம்படுத்தி நியாயமான, நம்பிக்கைக்கு உரிய உலகில் அவர்கள் விரும்பும் குடும்பங்களை உருவாக்குவது என்பதை கருப்பொருளாகக் கொண்டு இந்த ஆண்டு இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது. மக்கள் தொகை அதிகரிப்பால் ஏற்படும் வறுமை, வேலை வாய்ப்பின்மை, தாய்மார்கள் நலன் குன்றுதல் உள்ளிட்ட எதிர்மறையான விஷயங்களை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மக்கள் தொகை தினம் குடும்ப திட்டமிடலின் அவசியத்தை எடுத்துரைப்பதாக மத்திய சுகாதார குடும்ப நலத் துறை அமைச்சர் திரு ஜேபி நட்டா கூறி உள்ளார். வளமான இந்தியாவை உருவாக்கும் வகையில் சுகாதாரமான, ஆளுமை மிக்க, வலுவான, ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

*சு□ந்திர போராட்ட வீரர்*

சுதந்திர போராட்ட வீரர் அழகு முத்துக்கோன் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளை ஒட்டி, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் ஆங்கிலேயே ஆதிக்கத்தை ஆரம்ப காலத்திலேயே துணிச்சலுடன் எதிர்த்து தாய் நாட்டின் சுதந்திரத்திற்காகவும், சுயமரியாதைக்காகவும் போராடிய முன்னோடி வீரர் அழகு முத்துக்கோன் என்று புகழாரம் சூட்டினார். இத்தினத்தை ஒட்டி, மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் மாவீரன் அழகு முத்துக்கோன் போன்ற முன்னோர்களின் வீர வரலாறுகளை இளைய தலைமுறையினருக்கு எடுத்து செல்வோம் என்று தெரிவித்துள்ளார். அடிமை வாழ்வை விட சுதந்திரமே உயர்ந்தது என்பதை தனது சொல்லாலும் செயலாலும் உணர்த்தியவர் அழகு முத்துக்கோன் என்று தமிழக முதலமைச்சர் திரு விஜய் புகழாரம் சூட்டி உள்ளார்.

திருநள்ளார்-தேவகவுடா

சனீஸ்வர பகவான் கோவிலில் முன்னாள் பிரதமர் திரு தேவகவுடா சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டார். காரைக்கால் அடுத்த திருநள்ளாறில் உள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர் தேவஸ்தானம் ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஆலயத்திற்கு இன்று காலை வருகை தந்த முன்னாள் பிரதமர் தேவகவுடா சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், 30 ஆண்டுகளுக்கு முன்பு திருநள்ளாறு கோயிலுக்கு வந்ததாகவும் தற்போது 93 வயதில் சாமி தரிசனத்திற்கு வந்து மன நிறைவுடன் சாமி தரிசனம் செய்ததாகவும் தெரிவித்தார். தொடர்ந்து. பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களின் சிறப்பான செயல்பாடுகள் இந்திய அளவில் மட்டுமின்றி, உலகளவிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. உலகத் தலைவர்கள் அனைவரும் அவரை ஒரு வலிமையான தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றார்.

150 கோடி மக்கள் தொகை கொண்ட இந்த ஆளுமை மிக்க நாட்டில், தற்போதைய சூழலில் பிரதமர் திரு மோடிக்கு நிகராகவோ அல்லது அவருக்கு மாற்றாகவோ பொறுப்பேற்கக் கூடிய மற்றொரு தலைவர் யாரும் இல்லை என்றும் இந்த நாட்டை வழிநடத்துவதற்கு தற்போதைய சூழலில் பிரதமர் திரு மோடி ஒருவரே சிறந்த தலைவராக விளங்குகிறார் என்றும் அவர் கூறினார்.

தொடர்ந்து தமிழக முதல்வர் குறித்து பேசிய அவர் தமிழக மக்களின் பேராதரவைப் பெற்ற ஒரு மக்கள் தலைவராகத் திகழ்கிறார் என்றும், தமிழகத்தில் அடித்தட்டு மக்கள், உழைக்கும் வர்க்கத்தினர் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் என அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து அவருக்குத் தங்கள் ஆதரவை வழங்கியுள்ளனர் என்று தமிழக முதலமைச்சருக்கு புகழாரம் சூட்டினார்.

கிரிக்கெட்

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5-ஆவது டி- 20 கிரிக்கெட் போட்டி இன்று இரவு 7 மணிக்கு SouthAmpton -இல் நடைபெறுகிறது. 5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரை 3 போட்டிகளில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி கைப் பற்றி உள்ளது.

கால்பந்து

உலக கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டங்களில் இந்திய நேரப்படி நாளை அதிகாலை மணி 2.30 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் நார்வே- இங்கிலாந்து அணியையும், காலை 6.30 மணிக்கு நடைபெறும்

மற்றொரு ஆட்டத்தில் அர்ஜெண்டினா-சுவிட்சர்லாந்து அணியையும் எதிர்கொள்கின்றன. பிரான்ஸ்-பெயின் அணிகள் ஏற்கனவே அரைஇறுதி ஆட்டத்திற்கு முன்னேறி உள்ளன.

வானிலை

தமிழக கடலோரப் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதால் தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளில் இன்று முதல் வரும் 17-ஆம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

ஆக்லாந்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றினார்.

நாட்டின் கடலோரப் பாதுகாப்பை மீற முடியாததாக மாற்றுவதில் அரசு உறுதியாக உள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

உலக மக்கள் தொகை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

காரைக்கால் திருநள்ளாறு சனீஸ்வர பகவான் கோவிலில் முன்னாள் பிரதமர் திரு தேவகவுடா சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/11.7.2026/Script.

-----------------------------